அளிப்பதற்காக புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பல முறை மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறது. அதேமாதிரி மத்திய நிதித் துறை அமைச்சருக்கும் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். ஆனாலும்கூட, தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கின்ற வகையில், அந்தத் தொழிலாளர்களுடைய நிதிக்கு, அவர்களுக்கு வருமான வரியிலிருந்து வரி விலக்கு அளிப்பதற்கு மத்திய அரசு இன்றைக்கும் மறுத்து வருகிறது. இங்கே இருக்கின்ற உறுப்பினர்களெல்லாம், உங்களுடைய மத்திய அரசிடம் சொல்லி, அவர்களுக்கு வருமான வரி விலக்கு அளித்திட நீங்களும் உதவிட வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இருந்தாலும்கூட, அவர்கள் வரி விலக்கு அளிக்கவில்லை என்றாலும்கூட, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, தொழிலாளர்களினுடைய நலனில் அக்கறை கொண்டதன் காரணமாக அவர்களால் இன்றைக்கு அந்தப் பென்ஷன் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த விவாதம் நாளைக்கும் தொடரும். (குறுக்கீடு)

9. அரசினர் தீர்மானங்கள்

(இ) விதி 32-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை (05-04-2005) வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு) நாளைக்கு, நாளைக்கும் தொடரலாம்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: சென்னை உயர் நீதிமன்றத்திலே வழக்கு...

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இல்லை, இல்லை. (குறுக்கீடு) சரி, right.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: முடிந்தால், எப்படியும் ஏப்ரல் மாதத்திற்குள் உத்தரவு வரத்தான் போகிறது. உடனே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட்டத்தைக் கூட்டி...

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: அதுதான் சரி என்று சொல்லிவிட்டாரே அமைச்சர்.

2005 ஏப்ரல் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, நாளைக்கு வைத்துக்கொள்ளலாம்.*

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐ நாளை, 05–04–2005 செவ்வாய்க்கிழமை அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை (05–04–2005) வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை (05–04–2005) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–54 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

90. 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளூர் பகுதிக்குள் பொருட்களைக் கொண்டு வருவதன் மீதான வரி விதிகளில் திருத்தம் செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 19–8–2004 ஆம் நாளிட்ட 140 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளூர் பகுதிகளில் பொருட்கள் கொண்டு வருவதற்கான நுழைவு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/2001) 14 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]